# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **செல்வி. N. திலகேஸ்வரி, B.Sc., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2024-ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 14-ஆம் நாள், புதன்கிழமை

**I.A. No. 1 of 2023 in I.A. No. 1295 of 2015**
**in**
**O.S. No. 253 of 2009**
**(CNR No. TNSA-13000102-2009)**

1. சந்திரபாபுலு
2. மல்லிகா .. மனுதாரர்கள் / மனுதாரர்கள் / வாதிகள்

எதிராக

1. T.R.S. வெங்கடேஷ்
2. R. ரங்கராஜன்
3. M. பூமாலை நாயக்கர்
4. P. அண்ணாமலை (இறந்தவர்)
5. K. தீர்த்தராஜிலு
6. C. சந்திரன் .. எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

எதிராக

K.V. கோபாலன்,
த/பெ. உனக்கன் .. எதிர்மனுதாரர் / எதிர்பார்ப்பு எதிர்மனுதாரர்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 11.01.2024-ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள் / மனுதாரர்கள் /

வாதிகள் தரப்பில் திரு. A. சந்திரபாபுலு (Party in Person) அவர்கள் ஆஜராகியும், 4-ம் எதிர்மனுதாரர் காலமாகிவிட்ட நிலையில், 1 முதல் 3, 5, 6 எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V.R. ராஜேந்திர மகாஜன் அவர்கள் ஆஜராகியும், 7-ம் எதிர்மனுதாரர் / எதிர்பார்ப்பு எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. ராஜேஷ்கண்ணா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>உத்தரவுரை</u>

மனுதாரர்கள் / மனுதாரர்கள் / வாதிகள் இம்மனுவை இடை மனு எண் 968/2009-ல் 4-வது எதிர்மனுதாரராக உள்ள நபரை நீக்கம் செய்வதற்காக தாக்கல் செய்துள்ளனர்.

2. **<u>மனுதாரர்கள் / மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>**

மனுதாரர்கள் / மனுதாரர்கள் / வாதிகள் தங்களுடைய மனுவில், தாங்கள் இடை மனு எண் 968/2009-ஐ தாக்கல் செய்திருந்ததாகவும், அம்மனுவில் 4-வது எதிர்மனுதாரராக உள்ள அண்ணாமலை என்பவர் கடந்த 18.06.2017 தேதியன்று இறந்துவிட்டதாகவும், அவர் தொடர்பாக மனுவில் மேல் நடவடிக்கை எடுப்பதற்காக மனு ஒத்திவைக்கப்பட்டிருந்தது என்றும், முத்து மாரியம்மன் கோவில் நிர்வாக கமிட்டியின் ஒரு உறுப்பினராக இருந்து வந்தவர் தான் 4-வது எதிர்மனுதாரர் என்றும், அவரது வாரிசுகள் யாரும் கோவிலில் நிர்வாக கமிட்டியிலும், நிர்வாகத்திலும் எவ்வித பொறுப்பும் இல்லாததால் அவர்களை வழக்கில் சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், மற்ற நிர்வாக குழு உறுப்பினர்கள் தாவாவில் பிரதிவாதிகளாக இருந்து வருவதால் 4-வது எதிர்மனுதாரர் பெயரை இடை மனு எண் 968/2009-லிருந்து நீக்கம் செய்ய வேண்டுமென கூறியுள்ளனர்.

3. <u>**2-ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1, 3, 5, 6, 7 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :**</u> 2 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள் தங்களுடைய எதிருரையில், இடை மனு எண் 785/2015-ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும், கோவில் சொத்தின் 1-1/2 அடி நிலத்தை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட நோக்கத்தில் தான் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்திருப்பதாகவும், மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும், K.V. கோபாலன் உத்தேச தரப்பினரை வழக்கில் சாட்சியாக விசாரிக்கலாமே தவிர அவருக்கும், தாவா சொத்துக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்பதால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இடை மனு எண் 968/2009-ஆனது மனுதாரர்கள் / வாதிகளால் நீதிமன்ற ஆணையர் நியமனம் பெற வேண்டி தாக்கல் செய்யப்பட்டு அதில் நீதிமன்ற ஆணையரும் நியமனம் செய்யப்பட்டு அம்மனுவானது 26.08.2015 தேதியன்று நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டுள்ளது. அம்மனுவில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபனை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டி தான் இடை மனு எண் 785/2015-ஐ மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ளனர். அம்மனு நிலுவையில் இருந்து வந்த சமயத்தில் தான் 4-ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டுள்ளார் என்பதும் அவரைப் பொறுத்து மேல் நடவடிக்கை எடுப்பதற்காகவும், இடை மனு எண் 785/2015-ஆனது நிலுவையில் இருந்து வந்துள்ளது என்பதும் தெரியவருகிறது. ஆனால் மனுதாரர் ஏற்கனவே நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டுவிட்ட இடை மனு எண் 968/2009-ல் 4-ம் எதிர்மனுதாரரை நீக்கம் செய்ய வேண்டுமென மனுவில் கூறியுள்ளார். அவ்வாறு அவர் கூறியிருப்பது தவறாகும். இடை மனு எண் 968/2009-ல் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபனை தாக்கல் செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள இடை மனு எண் 785/2015-ல் தான் 4-ம் எதிர்மனுதாரர் இறந்தது சம்மந்தமாக மனுதாரர்

***.. 4 ...***

மேல் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. மேலும் மனுதாரர்கள் / வாதிகள் தங்களுடைய மனுவில் முத்து மாரியம்மன் கோவில் நிர்வாக கமிட்டி உறுப்பினர் என்ற முறையில் தான் 4-ம் எதிர்மனுதாரரை தாங்கள் வழக்கில் சேர்த்துள்ளதாகவும், அவர் இறந்த பிறகு அவருடைய வாரிசுதாரர்கள் யாரும் நிர்வாக கமிட்டியில் உறுப்பினராக இல்லாததால் அவர் வாரிசுதாரர்களை சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறியுள்ளனர். 2 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள் தங்களுடைய எதிருரையில் வழக்கு சங்கதிகள் குறித்தும் மற்றொரு உத்தேச தரப்பினரான K.V. கோபாலன் என்பவரை வழக்கில் சேர்த்துக்கொள்வது சம்மந்தமாக மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவுக்காக ஆட்சேபனையை மட்டும் தான் தங்களுடைய எதிருரையில் கூறியுள்ளனர். 4-ம் எதிர்மனுதாரர் இறந்துபோன பிறகு அவரது வாரிசுதாரர்களை சேர்க்க வேண்டியது சம்மந்தமாக எந்தவித ஆட்சேபனையோ, சங்கதியையோ கூறவில்லை. அசல் வழக்கின் வழக்குரையை பரிசீலனை செய்ததில் 4-ம் எதிர்மனுதாரர் / 4-ம் பிரதிவாதியை ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவிலில் நிர்வாக கமிட்டியின் பொருளாளர் என்ற முறையில் தான் மனுதாரர்கள் / வாதிகள் வழக்கில் சேர்த்துள்ளனர் என்பது தெரியவருகிறது. தற்போது அவர் இறந்துவிட்டபடியால் அவரது வாரிசுதாரர்கள் யாரும் திருக்கோவில் நிர்வாக கமிட்டியில் இல்லாததாலும் எதிர்மனுதாரர்கள் இது தொடர்பாக எவ்வித ஆட்சேபனையும் எழுப்பாததாலும், 4-ம் எதிர்மனுதாரரை இடை மனு எண் 785/15-லிருந்து நீக்கம் செய்ய அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. இறுதியாக, மனுதாரர்கள் / மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று

2024-ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 14-ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(Sd/- N. திலகேஸ்வரி)**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

| | |
|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| நீதிமன்ற சாட்சிகள் : | இல்லை |
| நீதிமன்ற சான்றாவணங்கள் : | இல்லை |

**(Sd/- N. திலகேஸ்வரி)**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

முு.மா.உ.நீ., (முு.கூ.பொ.) ஆத்தூர்.

<u>கூ.மா.உ.நீ., ஆத்தூர்.</u>

இ.ம.வ. எண் 1/2023

---------------

அ.வ. எண் 253/2009

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 14.02.2024